*9*

# "ஒரு சில நல்ல மனிதர்கள்"

## [பிலிப்பியர் 2:19-30]

*அமெரிக்க நாட்டின் கடற்படை கார்ப் என்ற படைப்பிரிவு (இது அமெரிக்க நாட்டின் ஆயுதப்படைகளின் ஒரு கிளையாகும்) "ஒரு சில நல்ல மனிதர்கள்" தேவை என்று விளம்பரம் செய்கிறது. "ஒரு சில நல்ல மனிதர்களுக்கான தேடுதல்" என்பது படையின் இந்தப் பிரிவில் தொடங்கவோ அல்லது இதனுடன் முடிவுபெறவோ இல்லை. பழங்காலத் தத்துவஞானி ஒருவர், எரியும் லாந்தர் விளக்குடன் வெளிச்சமான பகல் வேளையில் தெருக்களில் இங்கும் அங்கும் தேடி நடந்த வரலாற்றைப் பற்றிக் கூறப்படுகிறது. அவர் என்ன செய்துகொண்டிருந்தார் என்று அவரிடத்தில் கேட்கப்பட்டபோது அவர், "நான் ஒரு நேர்மையான மனிதனைத்தேடிக்கொண்டிருக்கிறேன்" என்று பதில் அளித்தார்.[1] தீர்க்கதரிசியான எசேக்கியேலிடம் கர்த்தர், "நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்" என்று கூறினார் (எசேக்கியேல் 22:30). கர்த்தருடைய சபையில் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஊழியம் செய்திருக்கும் ஒருவன் என்ற வகையில் நான், "ஒரு சில நல்ல மனிதர்கள்" என்பதே நமது இன்றியமையாத தேவைகளில் ஒன்றாக உள்ளது என்று நம்புகிறேன். (பெண்களும் வலிவார்ந்த வகையில் முக்கியமானவர்களாகவே உள்ளனர்; இருப்பினும், கர்த்தருடைய சபையில் ஆண்களே நடத்துவத்தைச் செய்ய வேண்டும் என்று தேவன் சித்தம் கொண்டு இருப்பதால், கிறிஸ்தவ ஆண்கள் மீது தேவன் வைத்துள்ள மாபெரும் வலியுறுத்துதல் என்பது சில வேளைகளில் அவசியம் நிறைந்ததாக உள்ளது.) பிலிப்பியர் 2:19-30ல், நாம் இரண்டு நல்ல மனிதர்களைப் பற்றி வாசிக்கிறோம்: தீமோத்தேயு மற்றும் எப்பாப்பிரோதீத்து.*

*இதுவரையிலும் நாம் படித்து முடித்துள்ள வசனப் பகுதியில், பவுல் தாம் இறந்து போகலாம் என்று பல முறை குறிப்பிட்டார். அவர் தமது வாழ்வைப் பற்றி, "பானபலியாக வார்க்கப்படுகிறது" என்று பேசினார் (2:17). இந்தச் சாத்தியக்கூறு தமது வாசகர்களிடத்தில் வேதனையை உண்டாக்கும் என்று அவர் உணர்ந்து அறிந்தார், எனவே அவர்களை ஆறுதல்படுத்த வேண்டும் என்று அவர் முடிவு செய்தார். அவர்களிடத்தில் இரண்டு நல்ல மனிதர்களை அனுப்பப் போவதாகக் கூறிய இது அவர் செய்த ஒரு வழியாக இருந்தது - ஒருவர் உடனடியாகவும் (எப்பாப்பிரோதீத்து) இன்னொருவர் விரைவிலும் (தீமோத்தேயு) அனுப்பப்பட இருந்தனர். அப்போஸ்தலர் தமது திட்டங்களை வரைகுறிப்பிடுவதில், இந்த உடன் ஊழியக்காரர்களின் பண்பைப் பற்றிப் பாராட்டினார். அவரது குறிப்புகளில் இருந்து நாம், தேவன் தமது ஊழியத்தில் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய மனிதர்களின் வகையைப் பற்றி கற்றுக்கொள்கிறோம்.*

*சில வேளைகளில் நாம், ''ஒரு உண்மையான மனிதர்'' - என்ற சொல்விளக்கத்தைப் பின்வரும் தகுதிபடுத்துகிற சொற்றொடர்களுடன்*

கேள்விப்படுகிறோம்: "ஒரு உண்மையான மனிதர் இதைச் செய்கிறார்" அல்லது "ஒரு உண்மையான மனிதர் இதை அல்லது அதைச் செய்யமாட்டார்." "ஒரு உண்மையான மனிதர்" பற்றிய உலகத்தின் விளக்கமானது நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. ஒரு நாட்டிற்குள்ளும்கூட இது பகுதிக்குப் பகுதி வேறுபடுகிறது மற்றும் கிராமப்புறத்தில் இருந்து நகர்ப்புறத்திலும் இது வேறுபடுகிறது. நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், "ஒரு உண்மையான மனிதர்" என்பவருக்கு உலகத்தின் நிபந்தனையானது தேவனுடைய நிபந்தனை போன்று இருப்பதில்லை. இந்தப் பாடத்தில் நாம், *அக்கறைப்படுகிற* மற்றும் *துணிவுள்ள* "ஒரு சில நல்ல மனிதர்களை" தேவன் தேடுகிறார் என்பதைக் கற்றுக்கொள்வோம்.

## அக்கறைப்பட்ட ஒரு மனிதர் (2:19-24)

### நபர்

முதலில் பவுல், தீமோத்தேயுவைப் பற்றிப் பேசினார் (வசனம் 19). பவுலுக்கு, தீமோத்தேயுவைக் காட்டிலும் வேறு எவரும் அதிகம் விசேஷித்தவர்களாக இருக்கவில்லை. சுவிசேஷக ஊழியரான இந்த இளைஞர், பவுலின் நிருபங்களில் இருபத்தி ஐந்து முறைகளுக்கும் மேலாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். அனேகமாகத் தீமோத்தேயு ஒரு வாலிபவயது இளைஞராக இருந்தபோது அவரைப் பவுல் மனமாற்றி இருக்கலாம் (காண்க 1 கொரிந்தியர் 4:17) மற்றும் பிற்பாடு அவரைத் தமது சுவிசேஷப் பிரயாணங்களில் தம்முடன் பயணம் செய்யத் தேர்ந்தெடுத்து இருக்கலாம் (நடபடிகள் 16:1-4). இப்போது தீமோத்தேயு பவுலுடன் ரோமாபுரியில் இருந்துகொண்டு (பிலிப்பியர் 1:1) அவரது ஊழியத்தில் உதவினார்.

தீமோத்தேயுவின் ''உத்தமகுணத்தைப்'' பற்றி பிலிப்பியர்கள் அறிந்திருந்தாகப் பவுல் எழுதினார் (2:22ஆ). பிலிப்பி நகரில் தீமோத்தேயு பல வேளைகளில் இருந்திருந்தார். (காண்க நடபடிகள் 16:1, 3, 12; 19:22; 20:3, 4; 2 கொரிந்தியர் 1:1; 2:13; 9:2, 4. பிலிப்பி "மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றாக" இருந்தது; நடபடிகள் 16:12.) பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் அவரை அறிந்திருந்தனர் மற்றும் அவரை மதித்திருந்தனர். அவர், "தகப்பனுக்குப் பிள்ளை ஊழியஞ்செய்வதுபோல, அவன் என்னுடனேகூட சுவிசேஷத்தினிமித்தம் ஊழியஞ்செய்தானென்று" பிலிப்பியர்கள் அறிந்திருந்ததாகப் பவுல் கூறினார் (பிலிப்பியர் 2:22). பவுல் விசுவாசத்தில் பெற்ற மகனாக தீமோத்தேயு இருந்தார் (1 கொரிந்தியர் 4:17; 1 தீமோத்தேயு 1:2; 2 தீமோத்தேயு 1:2; 2:1). அவர்கள் பக்கம் பக்கமாகப் பல ஆண்டுகளாக ஊழியம் செய்திருந்தனர், மற்றும் அந்த இளம் சுவிசேஷகர் பவுலின் இருதயத்திற்கு மிகவும் பிரியமானவராக இருந்தார்.

### திட்டம்

இப்போது பவுல் தமது உடன் ஊழியக்காரரைப் பிலிப்பியர்களிடத்திற்கு அனுப்பத் திட்டமிட்டார்: "அன்றியும், நானும் … சீக்கிரமாய்த் தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பலாமென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் நம்பியிருக்கிறேன்" (2:19). இது தீமோத்தேயு பவுலின் தூதுவர் என்ற வகையில் அனுப்பப்பட்ட முதலாவது வேளையாக இருந்திராது (காண்க 1 கொரிந்தியர் 4:17; 16:10, 11;

*1 தெசலோனிக்கேயர் 3:6).*

*தீமோத்தேயுவைப் பிலிப்பியர்களிடத்தில் அனுப்புவதற்குப் பவுல் இரண்டு காரணங்களைக் கொண்டிருந்தார். முதலாவது அவர், பவுல் விசாரணைப்படுத்தப்பட்டதன் விளைவு பற்றிய அறிக்கை ஒன்றை எடுத்துச் செல்ல முடியும்: "ஆகையால் என் காரியங்கள் இன்னபடி நடக்கும் என்று நான் அறிந்தவுடனே அவனை அனுப்பலாமென்று நினைத்திருக்கிறேன்" (2:23). பவுல், தாம் விடுதலையாவோம் என்று நம்பியிருந்தார்: "அன்றியும் நானே சீக்கிரத்தில் வருவேனென்று கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறேன்" (வசனம் 24) இருந்தபோதிலும் அவர், இது நிச்சயமற்றதாக இருந்தது என்று புரிந்து கொண்டிருந்தார் (1:20). இவ்வாறாக அவர், தமது திட்டங்களை "கர்த்தருக்குள்" என்ற வார்த்தையைக் கொண்டு தகுதிப்படுத்தினார் (2:19, 24). ஒவ்வொரு விஷயமும் தேவனுடைய கரங்களில் இருந்தது மற்றும் அவரது சித்தித்திற்குக் கீழ்ப்பட்டு இருந்தது.*

*பிலிப்பியர்களைப் பற்றிய அறிக்கை ஒன்றைத் திரும்பக் கொண்டுவரக் கூடும்படியாகவும் தீமோத்தேயுவைப் பவுல் அனுப்பினார்: "... நானும் உங்கள் செய்திகளை அறிந்து மனத்தேறுதல் அடையும்படிக்குச் சீக்கிரமாய்த் தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பலாமென்று ... நம்பியிருக்கிறேன்" (வசனம் 19). பிலிப்பியர்களைப் பற்றிய செய்தி, ஊக்கமூட்டும் செய்தியாக இருக்க வேண்டும் என்று பவுல் எதிர்பார்த்தார் - அவ்வாறே அவர்களுக்கு அவர் கூறினார். பிரசங்கித்தலில் எனக்கு முன்னுதாரணமாக இருந்தவர்களில் ஒருவரான குளூவிஸ் ரோட்ஸ் என்பவர், "மக்கள் எவ்வளவு நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களோ, அவ்வளவு நல்லவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர்" என்று கூறுவார்.*

## ஆளுமைத்துவம்

*இந்த முக்கியமான பணிப்பொறுப்பிற்குப் பவுல், தீமோத்தேயுவைத் தேர்ந்து கொண்டது ஏன்? அவர், "அதேனென்றால், உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப்போல் மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை" என்று எழுதினார் (வசனம் 20). "என்னைப்போல் மனதுள்ளவன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (isopsuchon என்ற) கிரேக்க வார்த்தை, "சமமான" என்பதற்கான (iso என்ற) வார்த்தையுடன் "ஆத்துமா[மனம்]" என்பதற்கான (psuche என்ற) வார்த்தையை இணைத்துப் பெறப்பட்ட கூட்டு வார்த்தையாக உள்ளது. இது "சமமான மனதுள்ள" அல்லது "ஒன்றுபோன்ற மனதுள்ள" என்று அர்த்தப்படுகிறது.* KJV வேதாகமத்தில் "likeminded" [ஒன்றுபோன்ற மனதுள்ள] என்று உள்ளது. *"ஒரே மனதுள்ள" ஒரு நண்பரை அல்லது உடன் ஊழியக்காரரை ஒருவர் கண்டறிதல் என்பது விசேஷமானதாக உள்ளது. தாவீது மற்றும் யோனத்தான் ஆகியோர் என் நினைவுக்கு வருகின்றனர்: "யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது" (1 சாமுவேல் 18:1). பிலிப்பியர் 2:20ல் "என்னைப்போல் மனதுள்ளவன்" என்ற சொற்றொடர், தீமோத்தேயு பிலிப்பியர் மீது பவுல் கொண்டிருந்த அதே அன்பையும் அக்கறையையும் கொண்டிருந்தார் என்று அர்த்தப்படுகிறது. "உண்மையிலேயே மனிதர்களாக" இருப்பவர்கள் உணர்வெழுச்சிகளைக் கொண்டுள்ளனரா? "உண்மையிலேயே*

மனிதர்களாக" இருப்பவர்கள் அக்கறை கொள்கின்றனரா? பவுலின் கூற்றுப்படி, அவர்கள் அவ்வாறே இருக்கின்றனர்!

பவுல், பிலிப்பியர்களின் நலத்தைப் பற்றி "உண்மையாய் விசாரிக்கிறதற்கு … அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை" என்று கூறியது ஏன் என்று சிலர் ஆச்சரியப்பட்டுள்ளனர். ரோமாபுரியில் பவுலுடன் - லூக்கா, யோவான் மாற்கு, தீகிக்கு மற்றும் எப்பாப்பிரா உட்பட - மற்ற உடன் ஊழியக்காரர்களும் அவ்வப்போது இருந்துள்ளனர் (நடபடிகள் 27:1; 28:14-16; எபேசியர் 6:21; கொலோசெயர் 1:7, 8; 4:7, 8, 12, 14; பிலேமோன் 23, 24). நிச்சயமாகவே பவுல் இந்த மனிதர்கள் அக்கறையற்று இருந்தனர் என்று அவர்கள்மீது குற்றம் சாட்டியிருக்க மாட்டார். பிலிப்பியருக்குப் பவுல் நிருபத்தை எழுதியவேளையில், அனேகமாக இவர்களில் எவரும் அவருடன் ரோமாபுரியில் இருந்திருக்க மாட்டார்கள்; சந்தேகத்திற்கு இடமின்றி, அவர்கள் மற்ற ஊழியங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பார்கள். வசனத்தை உண்மையாய் அறிவிக்கக்கூடிய மற்றவர்கள் ரோமாபுரியில் வாழ்ந்தனர் (காண்க பிலிப்பியர் 1:14-16); இவர்களைப் பற்றிய விஷயம் என்ன? ஒருவேளை பவுல் இந்த நிருபத்தை எழுதிய வேளையில், அப்படிப்பட்ட பயணத்தை மேற்கொள்வதற்கு, செல்லத் தகுதியாக இருந்தவர் மற்றும் செல்ல *மனவிருப்பமாக* இருந்தவர் எவரும் இல்லை என்று அர்த்தப்படுத்தி இருக்கலாம்.

அப்போஸ்தலருடைய வார்த்தையை ஒருவர் எப்படி விளக்கப்படுத்தினாலும், அவைகள் தீமோத்தேயுவைப் பற்றிய பிரகாசிக்கும் நற்சாட்சியாகவே இருக்கின்றன - மற்றும் அவைகள், அப்போதும் இப்போழுதும் உள்ள கிறிஸ்தவர்களுக்குச் சட்டமுறைமையாக உள்ளன. டிவைட் பென்ட்டகாஸ்ட் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> இங்கு போதிக்கப்பட வேண்டிய பரிசுத்தவான்கள் உள்ளனர். எவரொருவரும் அக்கறைப்படுவதில்லை. இங்கு ஆற்றும்படி கட்டப்பட வேண்டிய காயம்பட்ட இருதயங்கள் உள்ளன. எவரொருவரும் அக்கறைப் படுவதில்லை. இங்கு கிறிஸ்துவுக்காகச் சென்று சேரப்பட வேண்டிய மனிதர்கள் உள்ளனர். எவரொருவரும் அக்கறைப்படுவதில்லை. இங்கு கர்த்தருடைய விஷயங்களில் போதிக்கப்பட்டு வழிநடத்தப்பட வேண்டிய பிள்ளைகள் உள்ளனர், மற்றும் எவரொருவரும் அக்கறைப்படுவதில்லை.[2]

ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள் பிலிப்பியர்களைப் பற்றி அக்கறையில்லாது இருந்து ஏன்? தகுதியுள்ள அவர்கள் பிலிப்பி நகருக்குப் பயணம் செய்ய மனவிருப்பம் இல்லாதிருந்தது என்? தொடர்ந்து பவுல், "மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்" என்று கூறினார் (வசனம் 21). ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் கடந்து செல்லுகையில், எழுநூறு மைல்களுக்கு அப்பால் இருந்த ஒரு சிறிய ரோமக்காலனியானது அவர்களுக்கு கொஞ்சமே ஆர்வம் உள்ளதாக இருந்திருக்கும். பிலிப்பி நகரத்தின் தேவைகள் குறிப்பிடப் பட்டிருந்தால், சிலர் "பிலிப்பி நகரத்தைப் பற்றி நாம் ஏன் அக்கறை கொள்ள வேண்டும்? நாம் எப்போதும் எதிர்கொள்ளக் கூடியவற்றைக் காட்டிலும் அதிகமான தேவைகள்

இப்போது இங்கேயே உள்ளனவே!'' என்று பதில் அளித்திருப்பார்கள் என்று என்னால் கற்பனை செய்ய முடிகிறது! இவ்வகையான ஆவியானது சுவிசேஷ ஊழியத்தையும் உலகம் முழுவதிலும் செய்யப்படும் ஊழியத்தையும் நெருக்கடிக்கு ஆளாக்கி இருக்கிறது. காலங்கள் கடந்து போகையில், சுயமையமான சிந்தையானது இன்னும் அதிகம் குறுகலாகிறது:

- "எனது நாட்டில் அதிகமான தேவைகள் இருக்கும்போது, உலகத்தைப் பற்றி நான் ஏன் அக்கறைப்பட வேண்டும்?"
- "நான் வாழும் இடமான எனது நகரில் அதிகமான தேவைகள் இருக்கும்போது, எனது நாட்டைப் பற்றி நான் ஏன் அக்கறைப்பட வேண்டும்?"
- "நான் ஆராதிக்கும் சபைக்குழுமத்தில் அதிகமான தேவைகள் இருக்கும்போது, நான் வாழும் நகரத்தைப் பற்றி நான் ஏன் அக்கறைப்பட வேண்டும்?"
- "எனக்கு அதிகமான தேவைகள் இருக்கும்போது, நான் ஆராதிக்கும் சபைக்குழுமத்தில் உள்ள மற்ற உறுப்பினர்களின் தேவைகளைப் பற்றி நான் ஏன் அக்கறைப்பட வேண்டும்?"

பவுலினால் விவரிக்கப்பட்ட ஆவியை விட அதிகமாக சுவிசேஷத்தின் வளர்ச்சியைத் தடை செய்யும் விஷயம் வேறு எதுவும் இல்லை: "மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்." ஆராதிக்கும் இடத்தின் வெளியே "JESUS ONLY" ["இயேசு மாத்திரமே"] என்று அறிவிப்புப் பலகை தொங்க விடப்பட்டிருந்த ஒரு சபையைப் பற்றி நான் வாசித்தேன். இவ்வாக்கியத்தின் முதல் மூன்று எழுத்துக்களை ஒரு புயல் வீசி எறிந்து விட்டது, அதன்பின்பு அது "US ONLY" ["நாம் மாத்திரமே"] என்று வாசிக்கப்பட்டது.[3] அவ்வார்த்தைகள் ஒருசிலரை விவரிக்கின்றன என்பது கவலைக்குரியது. பவுல் நமக்குப் பின்வரும் அறைகூவலைக் கொடுத்தார்: "ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்" (1 கொரிந்தியர் 10:24). இது அவர் தாமே எதிர்கொள்ள முயற்சித்த ஒரு அறைகூவலாக இருந்தது: அவர் தமது "சுயபிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு" நடந்துகொண்டார் (1 கொரிந்தியர் 10:33). இன்றைய நாட்களில் நமக்கு, *அக்கறை கொள்கிற*, சொந்த நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மக்களின் தேவைகளினால் அசைக்கப்பட்டுள்ள, அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தங்களால் இயன்றவற்றை செய்வதற்கு மனவிருப்பம் கொண்ட ஆண்கள் - மற்றும் பெண்கள் - தேவைப்படுகின்றனர். நான் வெளிநாடுகளில் சென்றுஊழியம் செய்பவனாக இருந்த போது, சொந்த விருப்பங்களும் ஆர்வங்களும், வெளிநாட்டு ஊழியத்தைச் செய்வதால் தங்கள் கனவுகளை நனவாக்கும்படி வாழ்வதில் இருந்து தடைசெய்திருந்த, வெளிநாட்டு ஊழியத்தை செய்ய இருந்த பலருடன் நான் பேசியிருக்கிறேன்.

## ஒரு துணிந்த மனிதர் (2:25-30)

பவுல், தீமோத்தேயுவை அனுப்ப விருப்பம் கொண்டிருந்தார், ஆனால் அவர் தமது விசாரணை முடியும் வரை அதைச் செய்ய விரும்பவில்லை. உடனடியாகப் பிலிப்பி நகருக்குச் செல்ல வேறு யாரேனும் ஒருவர் தேவைப்பட்டார். எப்பாப்பிரோதீத்துவை அனுப்புதலே பவுலின் உடனடித் திட்டமாக இருந்தது.

### அவரது ஊழியம்

வேதாகமத்தில், பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் மாத்திரமே எப்பாப்பிரோதீத்துவைப் பற்றி நாம் வாசிக்கிறோம், ஆனால் இங்குள்ள சுருக்கமான சித்தரிப்பு, அவர் தேவனுக்கு மிகச்சிறந்த ஊழியக்காரராக இருந்திருப்பார் என்பதை வெளிப்படுத்துகிறது. அவர், "பழங்கால இலக்கியத்தில் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டதும் அடிக்கடி காணப்படுவதுமான ஒரு பெயரைச் சுமந்திருந்தார், இது சில வேளைகளில் எப்பாப்பிரா என்று சுருக்கப்பட்டுள்ளது."[4] (இருப்பினும் இந்த எப்பாப்பிரோதீத்து, கொலோசெ நகரில் இருந்த சபையின் உறுப்பினராக இருந்த எப்பாப்பிரா அல்ல என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது [காண்க - கொலோசெயர் 1:7; 4:12; பிலேமோன் 23].) இது, "மனம் மயக்குதல்" என்று அர்த்தப்பட்ட ஒரு கிரேக்கப் பெயராக இருந்தது. எந்த ஒரு கண்ணோகக் கருத்திலும், எப்பாப்பிரோதீத்து "மனம் மயக்கும்" தனிநபராக இருந்ததாகவே காணப்படுகிறது.

பிலிப்பி நகரில் இருந்த சபையானது ரோமாபுரியில் இருந்த பவுலுக்கு உதவி அனுப்பியிருந்தது (காண்க 1:3). பிலிப்பி நகரில் இருந்த சபைக்குழுமம் அனேகமாக, மக்கெதோனியாவில் இருந்த மற்ற சபைக் குழுமங்களைப் போன்று ஏழ்மையினால் தாக்கப்பட்டதாக இருந்திருக்கலாம் (காண்க 2 கொரிந்தியர் 8:1, 2; நடபடிகள் 16:12); ஆனால் பவுல் எங்கிருந்தார் என்று அவர்கள் அறிந்தபின்பு, அவருக்காக நிதி சேகரிக்க அவர்கள் தியாகம் செய்தனர். அந்தப் பங்குத் தொகையை எடுத்துச் செல்லும்படி எப்பாப்பிரோதீத்து தேர்ந்தெடுக்கப்பட்டார் (பிலிப்பியர் 4:18).

2:25ல் எப்பாப்பிரோதீத்து, ''உங்கள் ஸ்தானாபதி'' என்று அழைக்கப்பட்டுள்ளார். "ஸ்தானாபதி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (Gk.: *apostolon* என்ற) வார்த்தையில் இருந்தே நாம், ''அப்போஸ்தலர்'' என்ற வார்த்தையைப் பெற்றுள்ளோம். இது ''இருந்து'' (*apo*) என்ற முன்னிடைச் சொல், "அனுப்ப" என்பதற்கான (*stello* என்ற) வார்த்தையுடன் இணைக்கப்பட்ட கூட்டு வார்த்தையின் வினைவடிவத்தில் உள்ளது. இதற்கான பெயர்ச்சொல், ''அனுப்பப்பட்ட ஒருவர்'' என்று அர்த்தப்படுகிறது. இது புதிய ஏற்பாட்டில், இயேசுவினால் *அனுப்பப்பட்டவர்களைக்* குறிப்பதற்கு முதன்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது: பன்னிருவர் (காண்க மத்தேயு 10:2; நடபடிகள் 1:2, 26; 2:42, 43) மற்றும் பவுல் (காண்க ரோமர் 1:1; 11:13; காலாத்தியர் 1:1, 17). துணைநிலைக் கருத்தில் இது, சபைக் குழுமங்களினால் *அனுப்பப்பட்டவர்களைக்* குறிக்கிறது (காண்க நடபடிகள் 14:14; ரோமர் 16:7; 2 கொரிந்தியர் 8:23). பிலிப்பியர் 2:25ல் இது, "நீங்கள் அனுப்பியவர்" என்று அர்த்தப்படுகிறது. அவர்கள் எப்பாப்பிரோதீத்துவை அனுப்பி இருந்தனர் என்ற உண்மையானது, அவர் மீது அவர்கள் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையைச் சுட்டிக்காண்பிக்கிறது. (எப்பாப்பிரோதீத்து பிலிப்பி நகரில் இருந்த சபையில்

ஒரு மூப்பராகவோ அல்லது ஒரு உதவிக்காரராகவோ இருந்தார் என்று பல எழுத்தாளர்கள் யூகிக்கின்றனர். அவர் அவ்வாறு இருந்திருக்கலாம், ஆனால் வேதவசனம் அதைப் பற்றி ஒன்றும் கூறுவதில்லை.)

எப்பாப்பிரோதீத்து ரோமாபுரிக்கு வந்து சேர்ந்த உடனே, அவர் கொடையைக் கொடுத்துவிட்டு உடனடியாக பிலிப்பி நகருக்குத் திரும்பிவிடவில்லை. மாறாக அவர், சிறைவைக்கப்பட்டிருந்த பவுலுக்கு உதவி செய்யத் தங்கினார். பிலிப்பியர்களுக்குப் பவுல், அவர் "உங்கள் ஸ்தானாதிபதியும் என் குறைச்சலுக்கு உதவிசெய்தவனுமான" என்று கூறினார் (வசனம் 25). "உதவிசெய்தவன்" என்பதற்கான வார்த்தையானது, மிகவும் பொதுவான *diakonos* என்பதாக அல்ல, ஆனால் இது *leitourgos* என்ற வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. வில்லியம் பார்க்ளே என்பவர் பின்வருமாறு இதை விளக்கப்படுத்தினார்:

> உலகப்பிரகாரமான கிரேக்க மொழியில் இது ஒரு மாட்சிமைமிக்க வார்த்தையாக இருந்தது. பழங்கால நாட்களில், கிரேக்க நகரங்களில், தங்கள் நகரத்தை நேசித்ததால், தங்கள் சொந்த செலவில் குறிப்பிட்ட சில மாபெரும் குடிமைக் கடைமைகளை மேற்கொண்ட மனிதர்கள் இருந்தனர். அது ஒரு தூதரகத்தின் செலவுகளை ஈடுகட்டப் பணம் கொடுப்பதாக இருக்கலாம், அல்லது மாபெரும் கவிஞர்களின் நாடகங்களை அரங்கேற்றும் செலவாக இருக்கலாம், அல்லது விளையாட்டுகளில் நகரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டு வீரர்களின் பயிற்சிக்கான செலவாக இருக்கலாம் அல்லது போர்க்கப்பல் ஒன்றைக் கட்டி தேசத்தின் கப்பற்படையில் படைக்குழுவினர் பணியாற்றச் செலுத்தப்படும் செலவாக இருக்கலாம். இவ்வாறு செலவு செய்யும் இந்த மனிதர்கள், நாட்டின் மிக மேன்மையான புரவலர்களாக இருந்தனர் மற்றும் இவர்கள் *leitourgoi* என்று அறியப்பட்டிருந்தனர்.[5]

எப்பாப்பிரோதீத்து, பிலிப்பியர்களின் சார்பில், பவுலின் புரவலராக இருந்தார். 30ம் வசனம், அவர், அப்போஸ்தலருக்குப் பிலிப்பியர்கள் செய்ய வேண்டிய ஊழியத்தில் "குறைவை நிறைவாக்கினார்" என்று கூறுகின்றது. "ஆங்கிலத்தில் ["*what was deficient*" என்ற சொற்றொடர்] ஒரு கடிந்துகொள்ளுதல் போன்று ஒலிக்கிறது, ஆனாலும் கிரேக்க மொழியில் இவ்வாறு ஒலிக்கும் நோக்கம் கொண்டிருப்பதில்லை."[6] பிலிப்பியர்களைப் பொறுத்தமட்டில், பவுல் ரோமாபுரியில் இருந்த போது, அவர்கள் அவருடன் இருக்க இயலாதிருந்தது தான் அவர்களுடைய ஒரே "குறையாக" இருந்தது. அடுத்த அதிகாரத்தில் பவுல் "... இப்படிச் செய்ய எண்ணங்கொண்டிருந்தீர்கள், சமயம்மாத்திரம் உங்களுக்கு நேரிடவில்லை" என்று கூறினார் (4:10). அவர்களின் "குறைவு" அவர்களின் பிரதி நிதியான எப்பாப்பிரோதீத்துவினால் நிறைவாக்கப்பட்டது. CJB வேதாகமம், அவர் பவுலுக்கு "நீங்கள் கொடுக்க இயலாதிருந்த நிலையில் இருந்த உதவியை" அவர் [எப்பாப்பிரோதீத்து] கொடுத்தார் என்று கூறுகிறது.

எப்பாப்பிரோதீத்து குறிப்பாகச் செய்தது என்ன? அவர் ஒரு பிரசங்கியாராகவோ அல்லது போதகராகவோ இருந்தார் என்பதற்கான குறிப்பு எதையும் நாம் காண்பதில்லை. மாறாக அவர், பவுலின் தேவைகளாக இருந்தவை எவைகளோ, அவைகளைக் கவனிக்கும் ஒரு "ஊழியக்காரராக" - ஒரு

வேலைக்காரராக - இருந்தார். அப்போஸ்தலர் ஒரு வயது முதிர்ந்த மனிதராகவும், விலங்குகள் மற்றும் காவலர் ஆகியோரால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தவராகவும் இருந்தார் (பிலேமோன் 9; எபேசியர் 6:20). யாரேனும் ஒருவர் அவருக்கு உணவு வாங்கி அதைத் தயார் செய்ய வேண்டியிருந்தது. யாரேனும் ஒருவர், அவர் உடுத்திக்கொள்ள ஏதாவது ஆடையைக் கொண்டிருந்தார் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. யாரேனும் ஒருவர் அவரது அறையில் பொருட்களை அமைவு செய்ய வேண்டியிருந்தது. யாரேனும் ஒருவர் அவரைப்படுக்கையிலேயே இருக்கும்படி நிர்ப்பந்தித்த "அவர் மாம்சத்தில் இருந்த முள்ளுக்கு" அக்கறை செலுத்த வேண்டியிருந்தது (2 கொரிந்தியர் 12:7). (பவுலின் "மாம்சத்தில் இருந்த முள்" என்பது சரீரப் பிரகாரமான ஒரு நோயாக இருக்கலாம் என்று நான் யூகிக்கிறேன்.) சில வேளைகளில் பவுல், யாரேனும் ஒருவர் தமக்குத் துணையாக இருக்க வேண்டும் என்று விரும்பி இருக்கலாம். உலகப் பிரகாரமான இந்தப் பணிப்பொறுப்புக்களுடன் கூட, ஓட வேண்டிய குற்றேவல் பயணங்கள், கொடுக்கப்பட வேண்டிய செய்திகள், விரிவாக்கப் படவேண்டிய அழைப்புகள் ஆகியவையும் இருந்திருக்கலாம்.

இந்த ஊழியங்களை எப்பாப்பிரோதீத்து எவ்வளவு காலம் செய்தார் என்று நமக்கு உறுதியாகத் தெரிவதில்லை, ஆனால் அது பல மாதங்கள் நடந்திருக்க வேண்டும். அவர் வந்து சேர்ந்து சில காலத்திற்குப் பின்பு, அவர் வியாதிப்பட்டார். அவரது சுகவீனம் பற்றிய செய்தி பிலிப்பி நகருக்குச் சென்று சேர்ந்தது. பின்பு யாரோ ஒருவர், பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் அவரது சுகவீனம் பற்றி அறிந்தனர் என்ற செய்தியைக் கொண்டு வந்தார். பயணம் என்பது அக்காலத்தில் மிகவும் மெதுவானதாக இருந்ததால், பிலிப்பி நகருக்கும் அங்கிருந்து ரோமாபுரிக்கும் செய்தி செல்லச் சற்றுக் காலம் எடுத்திருக்கும். இந்த வேளையில் பவுலின் தேவைகளுக்குச் செய்ய அவசியமான எல்லாவற்றையும் எப்பாப்பிரோதீத்து நிறைவேற்றியிருந்தார்.

சிலர், எப்பாப்பிரோதீத்துவின் கடமைகளைப் பொதுவானவைகளாகவும் முக்கியமற்றவைகளாகவும் கருதலாம், ஆனால் அவர் "கிறிஸ்துவின் ஊழியத்தை" செய்தார் என்று பவுல் கூறினார் (பிலிப்பியர் 2:30). இந்த மனிதரைப் பற்றியும் இவரது ஊழியத்தைப் பற்றியும் பவுலின் மதிப்பீட்டைக் கவனியுங்கள்: இவரை அவர், "என் சகோதரனும், உடன்வேலையாளும், உடன்சேவகனும்" என்று அழைத்தார் (வசனம் 25).

கர்த்தருக்காகச் செய்யப்படும் எந்த ஊழியமும் முக்கியமான ஊழியமாகவே உள்ளது. பிரசங்கித்தல், போதித்தல், ஆராதனையை நடத்துதல் ஆகியவை முக்கியமான பணிப்பொறுப்புகளாக உள்ளது - ஆனால் அதைப் போன்றே, ஒரு சகோதரனை அல்லது சகோதரியை ஊக்குவித்தல், துயரப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளித்தல் மற்றும் வியாதியாக இருப்பவருக்கு உணவு எடுத்துச் செல்லுதல் ஆகியவையும் முக்கியமான பணிப்பொறுப்புகளாகவே உள்ளன (காண்க மத்தேயு 10:42; 25:31-46). எந்த ஒரு பணித்திறத்திலாவது ஊழியம் செய்ய - கர்த்தருடைய ஊழியம் வளமடையும்படிக்கு, பாராட்டப் படாத பணிகளையும் செய்வதற்கு - மனவிருப்பம் கொண்ட அதிகமான கிறிஸ்தவர்கள் நமக்குத் தேவை.

## அவரது தியாகம்

எப்பாப்பிரோதீத்து தமது ஊழியத்திற்கு ஒரு விலையைச் செலுத்தி இருந்தார்: அவர் சுகவீனப்பட்டார். 26ம் வசனம், "அவன் .. வியாதிப்பட்டு" இருந்தான் என்று கூறுகிறது. 27ம் வசனம், "அவன் வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது மெய்தான்" என்று கூறுகிறது. ரோமாபுரியில் அவருடையபடுக்கையைச் சுற்றி அவரது நண்பர்களும் தோழர்களும் கூடி, தங்கள் தலைகளை அசைத்து, "அனேகமாக இன்றிரவே அவர் கதை முடிந்து விடலாம்" என்று கூறியதாக என்னால் கற்பனையில் காண முடிகிறது. ஏதோ ஒரு வழியில் அவரது சுகவீனம் அவரது ஊழியத்துடன் பிணைக்கப்பட்டு இருந்தது. 30ம் வசனம், "தன் பிராணனையும் எண்ணாமல், கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்" என்று கூறுகிறது.

பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தைப் பற்றிய இந்தப் பாடங்களை நான் எழுதத் தொடங்குவதற்கு பல மாதங்களுக்கு முன்னர், எனது மனைவி ஜோவுடன் சேர்ந்து நான் இந்த நிருபத்தை வாசிக்கத் தொடங்கினேன். ஒவ்வொரு இரவிலும் எங்கள் மாலை உணவிற்குப் பின்னர், நாங்கள் ஒரு அதிகாரத்தை வாசிப்போம். நாங்கள் பல்வேறு மொழிபெயர்ப்புகளை இதற்குப் பயன்படுத்தினோம். எப்பாப்பிரோதீத்து "தன் பிராணனையும் எண்ணாமல்" மற்றும் "மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்" என்பவற்றைப் பற்றிய விபரம் என்னைக் கவர்ந்தது. அந்த வார்த்தைகளை வாசிக்கும் ஒவ்வொரு முறையும் நான், "எப்பாப்பிரோதீத்து தமது வாழ்வை இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்கும்படிக்கு என்ன *செய்தார்?*" என்று நான் கேட்டேன். அவ்விஷயத்தைப் படித்த பின்னர், இன்னமும் என்னால் அதைப் பற்றி உறுதியாக ஒன்றும் கூற முடியவில்லை, ஆனால் விளக்கவுரையாளர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒருசில யூகங்கள் இங்கு தரப்படுகின்றன:

- ரோமாபுரிக்கு வர எழுநூறு மைல்கள் பயணம் செய்தது - விசேஷமாகப் பணத்துடன் இவ்வாறு பயணம் சென்றது - இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்கும் விஷயமாக இருந்திருக்கும். எப்பாப்பிரோதீத்து வழியில் தாக்கப்பட்டிருக்கக் கூடும். இது பொதுவான விஷயம் என்று லூக்கா 10:30ம் வசனம் காண்பிக்கிறது, எப்பாப்பிரோதீத்து தாக்கப்பட்டிருந்தார் என்றால், அவர் பவுலுக்காகப் பணத்தைக் காக்கும் விஷயத்தை நன்கு செய்தார் என்றாகிறது.
- வியாதிகள் எங்கும் மேலோங்கியிருந்த காரணத்தினாலும், அந்த நாட்களில் பயணம் செய்தல் என்பது இடர்பாட்டிற்கு உள்ளாக்குவதாக இருந்தது. ஒரு வேளை எப்பாப்பிரோதீத்துவின் பயணத்தின்போது பிணியொன்று அவரைத் தொற்றியிருக்கலாம்.
- ஒரு வேளை ரோமாபுரியில் ஊழியம் செய்வதிலேயே இடர்பாடு வந்திருக்கலாம். கூட்டம் நிறைந்த மாநகரப் பகுதிகளில், வியாதி விரைவில் பரவிற்று, ரோமாபுரி முழுவதிலும் காய்ச்சல்கள் பிளேக் நோய் போன்று பரவியதைப்பற்றிப் பழங்கால எழுத்தாளர்கள் கூறுகின்றனர்.
- ஒருவேளை தமது வாழ்விற்கே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த ஒரு மனிதருடன் அடையாளப்படுத்தப் பட்டிருத்தலில் இருந்து இடர்ப்பாடு வந்திருக்கலாம். பவுல், சூழ்ச்சி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்; ரோமர்களைப் பொறுத்த மட்டில், அதைக்

*காட்டிலும் மிகமோசமான குற்றம் வேறு எதுவும் இல்லை. "மரண தண்டனைக்குரிய குற்றச்சாட்டின் பேரில் விசாரணைக்காகக் காத்திருக்கும் மனிதருக்கு தம்மை உதவி செய்பவராக அளிக்க முன்மொழியும் எவரொருவரும், அதே குற்றச் சாட்டு தம்மீது சுமரச் செய்யும் வகையில் அதில் உள்ளடங்கும் இடர்ப்பாட்டைக் கணிசமான அளவில் கொண்டிருக்கத் தம்மையே திறந்து கிடத்துபவராக இருப்பார்."*[7]

- *பவுலின் அறிவுறுத்துதல்கள் சிலவற்றைச் செயல்படுத்துதல் என்பது - எடுத்துக்காட்டாக, நோயாளிகளுக்கு ஊழியம் செய்யும்படி பவுல் கேட்டுக்கொண்டார் என்றால் அது - இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்குவதாக இருந்திருக்கக் கூடும். "தொடக்ககால சபையில் நோயாளிகள்மீது அக்கறை கொண்டு தங்கள் வாழ்வை இடர்ப்பாட்டிற்கு உட்படுத்தியவர்கள் parabolani என்று அழைக்கப்பட்டனர், இது இவ்வசனப் பகுதியில் 'எண்ணாமல்' [ஆங்கிலத்தில் "risking"] என்று தரவழைக்கப்பட்ட வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது, இது 'விளைவைப் பற்றிப்பொருட்படுத்தாத நபர்கள்' என்று நேரடி அர்த்தப்படுகிறது."*[8]
- *ஒருவேளை அவர் தம்மை மிக அதிகமாக விரிவாக்கி இருக்கலாம். பவுலின் உடன் ஊழியக்காரர்களைப் பற்றி யூகிப்பதில் நாம் சரியானவர்களாக இருந்தால், எப்பாப்பிரோதீத்து மற்றும் தீமோத்தேயு ஆகியோரைத் தவிர மற்றவர்கள் நகருக்கு வெளியே சென்றிருந்தால், அவர் மூன்று மனிதர்களின் வேலையைச் செய்ய முயற்சி செய்திருக்கலாம்.*

*எப்பாப்பிரோதீத்துவின் வியாதிக்குக் காரணம் என்ன என்று நாம் மிகக் துல்லியமாக அறிவதில்லை, ஆனால் அவர் கர்த்தருக்காகத் தமது உயிரை இடர்பாட்டிற்கு உள்ளாக்கினார் என்று நாம் அறிகிறோம். "இடர்பாட்டிற்கு உள்ளாக்குதல்'' (இது தமிழில் ''எண்ணாமல்'' என்றுள்ளது) என்ற வார்த்தையின் பயன்பாடு (இது paraboleuomai என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது) ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. பவுல் பயன்படுத்திய சொற்றொடர் "உடன்" என்பதற்கான (para என்ற) வார்த்தையை "எறிதல்" என்பதற்காக (ballo என்ற) வார்த்தையுடன் இணைக்கிறது. இது ''ஒருவர் தம்மை அபாயத்திற்கு ஆளாக்குதல் என்பதைக் குறிக்கிறது." இங்கு பயன்படுத்தப்பட்ட வார்த்தை, சூதாட்டச் சொற்றொடராகப் பயன்படுத்தப்பட்டு இருந்தது என்று எழுத்தாளர்கள் சுட்டிக்காண்பிக்கின்றனர். இது, வேதாகமம் சூதாட்டத்தைப் பொறுத்துக் கொள்கிறது என்று அர்த்தப்படுவதில்லை. "நேரடியான சூதாட்டம் என்பது அதாவது, உழைப்பில்லாது இலாபம் பெறலாம் என்ற நம்பிக்கையில், பணத்தைப் பணையம் வைத்தல் என்பது, வேதாகமத்தில் உள்ள பல வசனப்பகுதிகளினால் எதிர்க்கப்பட்டுள்ளது (பொறுத்துதல் 2 தெசலோனிக்கேயர் 3:10; எபேசியர் 4:28; கலாத்தியர் 6:7)."*[9] *இது, எப்பாப்பிரோதீத்து, கிறிஸ்துவின் ஊழியத்தைத் தமது சொந்தப் பாதுகாப்பைக் காட்டிலும் அதிக முக்கியமானதாக எண்ணினார் என்று அர்த்தப்படுகிறது.*

*தனது உயிரைக் காப்பதற்கு இரத்தம் செலுத்தப்பட வேண்டியிருந்த ஒரு*

ஆறுவயதுச் சிறுமியைப் பற்றி நான் வாசித்தேன்.[10] அவள் அரிதான வகை இரத்தப் பிரிவைக் கொண்டவளாக இருந்தாள், அவளது ஒன்பது வயதான அண்ணன் மாத்திரமே, அவ்வகை இரத்தத்தை அளிக்கக் கூடிய ஒரே நபராக இருந்தான். அவன் தனது தங்கையைக் காப்பாற்றத் தனது இரத்தத்தை எடுக்க சம்மதித்தான். அவர்கள் அவனது இரத்தத்தை எடுத்துக் கொண்டிருந்தபோது அவன், இரத்தம் எடுக்கும் நிபுணரைப்பார்த்து, "நான் எப்போது இறப்பேன்?" என்று கேட்டான். அவன் இரத்தம் கொடுத்தல் என்பது தனது மரணத்தை விளைவிக்கும் என்ற தவறான கருத்தைக் கொண்டிருந்தான் - ஆனால் தனது தங்கை வாழவேண்டும் என்பதற்காக அவன் அந்தத் தியாகத்தைச் செய்ய மனவிருப்பமாக இருந்தான். கர்த்தருடைய ஊழியமானது வாழ்ந்து வளம் பெறுவதற்காக, உள்ளபடியே தங்கள் வாழ்வை இடர்பாட்டிற்கு உள்ளாக்கத் துணிந்தவர்களுக்காகத் தேவனுக்கு நன்றி. யோவான், ''அவர் [இயேசு] தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்'' என்று எழுதினார் (1 யோவான் 3:16).

## அவரது சூழ்நிலை

எப்பாப்பிரோதீத்து, கிறிஸ்துவுக்குத் தமது உறுதிப்பாட்டின் காரணமாக வியாதிப்பட்டிருந்தார். "ஆகிலும், தேவன் அவனுக்கு இரங்கினார்" என்று பவுல் கூறினார் (வசனம் 27ஆ). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் சுகமடைந்தார். குணமாக்குதல் யாவையும் - இன்றைய நாட்களின் அற்புதமற்ற வகையில் குணமாகுதலும்கூட - கர்த்தரிடத்தில் இருந்தே வருகிறது. தொடர்ந்து பவுல், ''அவனுக்கு இரங்கினதுமல்லாமல், துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு, எனக்கும் இரங்கினார்'' என்று கூறினார் (வசனம் 27இ, ஈ). ''துக்கத்தின்மேல் துக்கம்'' என்பது மூல வசனத்தின் நேருக்குநேரான மொழிபெயர்ப்பாக உள்ளது. "துக்கத்தின்மேல் துக்கம்" என்பது "மூழ்கடிக்கும் துக்கம்'' என்று அர்த்தப்படுகிற பேச்சு உருவகமாக இருந்தது. இவ்வார்த்தைகளை நாம் நேருக்கு நேராக அர்த்தம் கொள்வோம் என்றால், முதல் "துக்கம்" என்பது எப்பாப்பிரோதீத்து வியாதிப்பட்டதால் விளைந்ததாகக் கண்ணோக்கலாம். இரண்டாவது "துக்கம்'' என்பது அவர் மரித்திருந்தால் வந்திருக்கக் கூடிய துக்கமாக இருந்திருக்கும்.

எப்பாப்பிரோதீத்து குணமடைந்த பின்பு, அவர் ரோமாபுரியிலேயே தங்கியிருக்க வேண்டும் என்று பவுல் விரும்பி இருக்கலாம். இருப்பினும் ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி, அவர் சுகவீனம் அடைந்ததைப் பிலிப்பிர்கள் அறிந்தனர் என்ற செய்தி வந்திருந்தது, இது எப்பாப்பிரோதீத்துவைக் கவலைக்குள்ளாக்கிற்று. பவுல், ''அவன் உங்கள் எல்லார்மேலும் வாஞ்சையுள்ளவனும், தான் வியாதிப்பட்டதை நீங்கள் கேள்விப்பட்டதினாலே மிகவும் வியாகுலப்படுகிறவனுமாயிருந்தான்'' என்று கூறினார் (வசனம் 26). "வியாகுலப்படுதல்" என்ற வார்த்தை, "கெத்சமெனே தோட்டத்தில் கர்த்தருடைய மனநிலையை (மத்தேயு 26:37) விவரிக்கப் பயன்படுத்திய அதே வார்த்தையாக உள்ளது. கிரேக்க மொழியில் இது, கனமான துக்கத்தினால் இளைப்படைந்து மேலாதிக்கம் செலுத்தப்பட்ட நிலையை விளக்கப்படுத்துகிறது."[11] LB வேதாகம பொழிப்புரையில், "அவர் உங்களைக் காண வேண்டும் என்று ஏங்கியிருந்தார்

*மற்றும் தாம் வியாதிப்பட்டிருந்ததை நீங்கள் கேள்விப்பட்டதால் மனக்கலக்கம் அடைந்திருந்தார்'' என்றுள்ளது. நீங்கள் எப்போதாவது வீட்டைப் பற்றிய ஏக்கம் கொண்டு நண்பர்கள் மற்றும் குடும்பத்தைப் பற்றிக் கவலைப் பட்டிருந்தால், எப்பாப்பிரோதீத்து எவ்வாறு உணர்ந்திருந்தார் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.*

*எப்பாப்பிரோதீத்துவைப் பிலிப்பி நகருக்குத் திரும்ப அனுப்புதல் மிகச்சிறப்பான விஷயமாக இருக்கும் என்று பவுல் முடிவுசெய்தார். இது அவரது [பவுலின்] சொந்த வாழ்வைக் கடினமுள்ளதாக ஆக்கும், ஆனால் இது எப்பாப்பிரோதீத்துவுக்கும் பிலிப்பியர்களுக்கும் ஆறுதல் அளிக்கும். அவர், "ஆகையால் நீங்கள் அவனை மறுபடியும் கண்டு சந்தோஷப்படவும், என் துக்கங்குறையவும், அவனை அதிசீக்கிரமாய் அனுப்பினேன்'' என்று எழுதினார் (பிலிப்பியர் 2:28). "எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை ... நாள்தோறும் நெருக்குகிறது'' என்பது பவுலுக்கு எப்போதும் இருந்து வந்தது (2 கொரிந்தியர் 11:28). எப்பாப்பிரோதீத்துவை வீட்டிற்கு அனுப்பிவைத்தல், பிலிப்பி நகரில் இருந்த சபை பற்றிய அவரின் [பவுலின்] கவலையிலிருந்து சற்று நிம்மதியை அவருக்குத் தருவதாக இருக்கும்.*

*எப்பாப்பிரோதீத்து இவ்வளவு விரைவாகத் திரும்பி வந்ததற்காக அவர் ஊழியத்தில் தோல்வியடைந்தார் என்று பிலிப்பியர்கள் கருதியிருக்க வாய்ப்புண்டு என்று பல எழுத்தாளர்கள் நினைக்கின்றனர். இதற்கான சாட்சியம் எதையும் நான் காண்பதில்லை; எப்பாப்பிரோதீத்துவுக்கும் பிலிப்பி நகரில் இருந்த சபைக்கும் இடையில் ஒரு நெருக்கமான, இதமான, அக்கறைகொள்ளும் உறவையே நான் காண்கிறேன். எவ்வகையிலும் பவுல், எப்பாப்பிரோதீத்து வீட்டிற்குத் திரும்ப வேண்டும் என்பது தமது கருத்தாக இருந்தது என்று வலியுறுத்தியதால் அவர் சாத்தியமான எந்த விமர்சனத்தையும் துண்டித்தார்.*

*எப்பாப்பிரோதீத்து பற்றிய பகுதியைப் பவுல் முடிக்கையில், அவர் பின்வரும் புத்திமதியை உள்ளடக்கினார்: "ஆனபடியினாலே நீங்கள் கர்த்தருக்குள் மிகுந்த சந்தோஷத்தோடே அவனை ஏற்றுக்கொண்டு, இப்படிப்பட்டவர்களைக் கனமாய் எண்ணுங்கள்'' (பிலிப்பியர் 2:29). அவர்கள் அவருக்கு [எப்பாப்பிரோதீத்துவுக்கு] ஒரு வீரனுக்குரிய வரவேற்பைத் தரவேண்டியவர்களாக இருந்தனர்! யாரேனும் ஒருவர், "ஆனால் அவர் வசீகரமற்ற ஒரு பணியை நிறைவேற்றிய சாதாரணக் கிறிஸ்தவராகத் தானே இருந்தார்! அவரை ஏன் இவ்வளவு உயர்வாக மதிக்க வேண்டும்?'' என்று மறுப்புரை தெரிவிக்கலாம். ஏனென்றால் அவர் தமக்கு ஒப்புவிக்கப் பட்டிருந்த பணியில் மனச்சாட்சிப்படி நேர்மையாகச் செயல்பட்டதால், அவர் இவ்வளவு உயர்வாக மதிக்கப்பட வேண்டியவராக இருந்தார்.*

*பவுல், "ஆகையால் ... யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; ... எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள்'' என்று எழுதினார் (ரோமர் 13:7). சந்தர்ப்பப் பொருளில், ரோமர் 13:7ல் பவுல், உலகப் பிரகாரமான ஆட்சியாளர்களுக்குச் செலுத்த வேண்டிய கனம் பற்றித் தமது சிந்தையில் கருத்துக் கொண்டிருந்தார்; ஆனால் கனம் பெறத் தகுதியான மற்றவர்களுக்கும் இது நடைமுறைப்படுத்தப்படலாம். ரோமர் 13:7ல், "கனம்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையும் பிலிப்பியர் 2:29ல் "கனமாக எண்ணுங்கள்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள*

வார்த்தையும், ஒரே வேர்வார்த்தையில் இருந்து வந்தவைகளாக உள்ளன.

துரதிர்ஷ்டவசமாக நாம், உண்மையாக ஊழியம் செய்பவர்களை எப்போதுமே ஏற்றுக்கொண்டு அவர்களை மதித்து ஒப்புக்கொண்டு விடுவதில்லை. புறக்கணிப்பின், இருதயத்தை உடைந்துபோகச் செய்யும் ஒரு உதாரணமானது, வெளிநாட்டில் ஊழியம் செய்யும் குறிப்பிட்ட ஒரு ஊழியக்காரரும் அவரது மனைவியும் பல ஆண்டுகள் ஊழியக்களத்தில் செலவிட்டுப் பின்பு இல்லம் திரும்பும்போது நடைபெற்றது. அவர்களுடன் விமானத்தில், புகழ்பெற்ற ஒரு விளையாட்டு வீரர் பயணித்து வந்திருந்தார். அந்த விளையாட்டு வீரரைச் சந்திக்க, ஊக்கம் உள்ள பாராட்டாளர்களின் கும்பல் ஒன்று வந்திருந்தது, ஆனால் ஊழியக்காரரை வரவேற்க எவரொருவரும் வரவில்லை. ஊழியக்காரரின் மனைவி, பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு, ஏமாற்றமுற்றிருந்த தனது கணவரைத் தேற்றினார்: "இது பொருட்படுத்தக்கூடிய இல்லம் திரும்புதல் அல்ல." தேவனுக்காக மேற்கொள்ளப்படும் சிறிய பணிப்பொறுப்பும்கூட அங்கீகரித்து உணரப்படும் நாள் வரும் என்பதற்காகத் தேவனுக்கு நன்றி (மத்தேயு 25:31-46). ஆனால் இவ்வாழ்வில் நாமும்கூட அதே பாராட்டுதலை வெளிப்படுத்தினால், அது அற்புதமான விஷயமாக இராதா?

இன்னொருவர், "ஆனால் நாம் மக்களை, அவர்களின் ஆவிக்குரிய செயல்பாட்டிற்காகக் கனம் செய்தால், இது மேட்டிமையை உருவாக்குமே!" என்று கூறி மறுப்புரைக்கலாம். அவ்வாறு உருவாக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பிலிப்பியர் 2ம் அதிகாரத்தில் பவுல், "வீண்பெருமை"யைக் கண்டனம் செய்தார் (வசனம் 3), அதே வேளையில் சகோதரரை "கனமாய் எண்ணுங்கள்" என்றும் அவர் ஊக்கப்படுத்தினார் (வசனம் 29). பின்வருமாறு எழுதிய ஏர்ல் பால்மர் கருத்தை நான் ஒப்புக்கொள்கிறேன்:

> "உங்களுக்கு நன்றி" என்று மிக அதிகம் கூறியதாலோ அல்லது ஒருவர் மற்றவரிடம் மிகுந்த பிரியம் காண்பித்ததாலோ, எந்த ஐக்கியத்துவமாவது ஊறுபடுத்தப்பட்டதாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆனால் பல சபைகள் தங்கள் உறுப்பினர்கள் மத்தியில் முழுமையான பிரியம் கொண்டிருப்பதில் குறைவுபட்டதால், உலர்ந்துபோய், நிறம் மங்கி நொறுங்கக் கூடியவையானது பற்றி நான் அறிந்து இருக்கிறேன்.[12]

"தேவனுக்கு மாத்திரமே செலுத்தப்பட வேண்டிய கனத்தைப் பெற்றுக்கொள்ள எவரொருவரும் பாத்திரராக இருப்பதில்லை என்பது உண்மையே, ஆனால் நாம் மனிதர்களுக்குச் செலுத்தக்கூடிய கனத்தின் வகையொன்றும் உள்ளது."[13] பவுல் தாமே, பிலிப்பியர் 2:25-30ல் எப்பாப்பிரோதீத்துவைப் பற்றிய தமது மதிப்பீட்டில், அவரைக் கனப்படுத்தினார். "கிறிஸ்துவைப் பின்பற்றிய தாழ்மைமிக்க இந்தப் பின்பற்றாளர் வாழ்ந்திருந்த, மதில்கள் சூழ்ந்த நகருக்கு முன்பாக, ஒருகாலத்தில் உலகத்தின் பேரரசிற்காகப் போராடிய ரோமப் போர்வீரர்களின் பெயர்களைக்கூட மனிதர்கள் மறந்து போயிருக்கும்போது ... புகழ்ச்சியின் இவ்வார்த்தைகள் வாசிக்கப்படும்."[14] கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், "[மற்றவர்கள்] தங்கள் முக்கியத்துவத்தையும் நமக்குப் பொக்கிஷமாக்கப்பட்ட அவர்களின் மதிப்பையும் உணரச் செய்யும் தாராளமான அன்பை" அளிக்க வழிகளைக் கண்டறிய வேண்டும்.[15]

## முடிவுரை

*பிலிப்பியருக்கு நிருபத்தை எழுதியதில் பவுல், சுயநலமற்ற தன்மையின் அவசியத்தை வெளிப்படுத்தினார் (2:3, 4). பின்பு அவர் சுயநலமற்ற தன்மையின் நிறைவான உதாரணத்தைக் கொடுத்தார்: இயேசு (2:5-8). அடுத்ததாக அவர் "கிறிஸ்துவின் சிந்தை" கொண்டிருந்த இரண்டு மனிதர்களின் உதாரணத்தைக் கொடுத்தார்: தீமோத்தேயு மற்றும் எப்பாப்பிரோதீத்து. என்ன ஒரு மேன்மை யான மனிதர்கள்; என்ன நல்ல மனிதர்கள்; நமக்கு என்ன ஒரு மிகச்சிறப்பான உதாரணங்கள்!*

*கடந்த காலத்தில், "ஆட்கள் தேவை" என்று கூறும் விளம்பரங்களைக் காணுதல் சாதாரணமாக இருந்தது. (இன்றைய நாட்களில் இவ்வகையான விளம்பரங்கள் மிகவும் பொதுவானவைகளாக உள்ளன: "உதவி தேவை.") "ஆட்கள் தேவை" என்ற வார்த்தைகளைத் தொடர்ந்து, அவர்கள் எந்த வேலைக்குத் தேவையோ, அந்த வேலையைப் பற்றிய விவரிப்புகள் தரப்பட்டன. ஆண்கள் - மற்றும் பெண்கள் இன்னமும் "தேவைப்படுகின்றனர்": மற்றவர்களுக்காக ஆழ்ந்த அக்கறைகொண்டிருந்த தீமோத்தேயு போன்ற, மற்றும் தங்களையே இடர்ப்பாட்டிற்கு உட்படுத்தக்கூடும் வேளையிலும் அவருக்கு [தேவனுக்கு] ஊழியம் செய்வதற்குத் துணிந்த எப்பாப்பிரோதீத்து போன்ற கிறிஸ்தவர்கள் தேவை!*

---

குறிப்புகள்

[1]Diogenes the Cynic (c. 400-c. 325 B.C.), quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations,* 16th ed., ed. Justin Kaplan (Boston: Little, Brown, and Co., 1992), 77. [2]J. Dwight Pentecost, *The Joy of Living: A Study of Philippians* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1973), 109. [3]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton Ill.: Victor Books, 1989), 82. [4]John F. Walvoord, *Philippians: Triumph in Christ,* Everyman's Bible Commentary (Chicago: Moody Press, 1971), 71. [5]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 49. [6]Pat Edwin Harrell, *The Letter of Paul to the Philippians,* The Living Word Commentary series, ed. Everett Ferguson (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 110. [7]Barclay, 48. [8]James M. Tolle, *Notes on Philippians* (San Fernando, Calif.: Tolle Publications, 1972), 47. [9]Avon Malone*, Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 70 n69. [10]இந்த வரலாறு பற்றி ஒரு விபரம், Charles R. Swindoll, *Laugh Again* (Dallas: Word Publishing, 1992), 120-21 என்ற புத்தகத்தில் உள்ளது.

[11]Tolle, 44. [12]Earl, F. Palmer, *Integrity in a World of Pretense: Insights from the Book of Philippians* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 118. [13]Tolle, 46. See Ephesians 6:2; 1 Timothy 5:17; 6:1; Hebrews 12:9; 1 Peter 2:17; 3:1-7. [14]Charles R. Erdman, *The Epistle of Paul to the Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 105. [15]Palmer, 117.